# II. பொருளாதார நிதிப் போக்குகள் – 1974

## (அ) தேசிய உற்பத்தியும் செலவும்

### 1. முன்னுரை

மொத்தத் தேசிய உற்பத்தி

தற்காலிக மதிப்பீடுகளின்படி, நிலையான (1959) விலைகளில் 1974 இன் மொத்தத் தேசிய உற்பத்தி 3.4 சத வீதத்தால் உயர்ந்து விளங்கியது. இது 1973 இன் 3.5 சதவீத மொத்தத் தேசிய உற்பத்தி உயர்ச்சியைவிட எல்லையளவால் குறைந்ததாகும்.

அட்டவணை (II) அ, நிலையான 1959 விலைகளில் 1973, 1974 ஆம் ஆண்டுகட்கான மொத்தத் தேசிய உற்பத்தியின் பகுப்பினையும், உண்மையான மொத்தத் தேசிய உற்பத்திக்கு ஒவ்வொரு துறையின் தொடர்புடைய பங்கினையும் தருகிறது.

1973 இன் ரூ. 3,530 இலட்ச உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில் உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தியானது, 1974 இல் உண்மையான அடிப்படையில் ரூ. 3,480 இலட்சத்தால் உயர்ந்து காணப்பட்டது. உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறை அமைப்பினை ஆய்கையில், 1974 இன் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்த முதன்மைத் துறைகளாக வேளாண்மையும் பணிகளும் குறைந்தளவில் கட்டடவாக்கமும் விளங்குகின்றன. மொத்தத் தேசிய உற்பத்தியில் வேளாண்மையின் தொடர்பிலான இன்றியமையாமை எல்லாவற்றையும் உள்ளிட்ட பொருளாதார வளர்ச்சிமீது பெரும் செல்வாக்கை அது செலுத்த வேளாண்மைத் துறையின் உற்பத்திக்கு உயர்ச்சிக்கு ஏதுவாயிற்று. 1973 இன் 2.6 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1974இல் வேளாண்மை, காட்டுத் தொழில் வேட்டையாடுதல், மீன்பிடி என்பனவற்றின் உயர்ச்சி 5 சத வீதமென மதிப்பிடப்பட்டது.

வேளாண்மைத் துறையின் வெளியீட்ட உயர்ச்சியானது பெரும்பாலும், நெல், துணை உணவுப்பொருட்களின் உற்பத்தி உயர்ச்சியில் தெளிவாக்கப்படுகின்றன. எனின் அவற்றின் உயர்ச்சி 1973 ஐ விட மிகவும் உயர்வாகும். பெருந்தோட்ட வேளாண்மையில், தேயிலை, றப்பரின் உற்பத்தி 1973 ஆம் ஆண்டைவிட குறைந்திருக்க நெல் உற்பத்தியானது, 1973 இன் மட்டத்திற்கு மேல் ஓரளவு உயர்ந்திருந்ததாக மதிப்பிடப்படுகிறது. கட்டடவாக்கத் துறையின் வெளியீட்ட உயர்ச்சிக்கு பெரும்பாலும், கட்டடப் பொருட்களின் வழங்கல் நிலையில் ஏற்பட்ட சீராக்கமே காரணமாகும். கட்டடவாக்கத் துறையின் வெளியீட்ட உயர்ச்சிக்கு அரச துறையினது பங்கானது, 1973 ஆம் ஆண்டைவிட உயர்ந்திருந்தது. 1974 இல் தயாரிப்புத் தொழில் துறையில் வெளியீட்டானது 4.1 சத வீதத்தால் வீழ்ச்சியடைவதற்குப் பெரும்பாலும் கைத்தொழில் தொழிற்கூடங்களின் வெளியீட்ட வீழ்ச்சியும் பெருந்தோட்டப் பயிர்கள் பயன்படுத்தலில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உண்மைப் பெறுமான வீழ்ச்சியும்

காரணமாயிற்று. பணிகள் துறையின் பொருளாதார நடத்தையின் மட்டத்தின்மீது, வேளாண்மையினதும் கட்டட வாக்கத்தினதும் உற்பத்தி உயர்ச்சி மேலெழுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தது. 1974 இல் பணிகள் துறையின் வெளியீட்டப் பெறுமானம் 5.3 சத வீதத்தால் உயர்ந்தது. இவ்வுயர்ச்சியில், போக்குவரத்தும் வர்த்தகமும் ரூ. 1,020 இலட்சத்தை அல்லது 4.2 சத வீதத்தை அளித்தன. உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் துறை வகை அமைப்பின் மாற்றங்களில் குறிப்பிடத்தக்க கூறு என்னவெனில், அண்மை ஆண்டுகளில் வேளாண்மைத் துறையினது அளிப்பில் ஏற்பட்ட தொடர்பான வீழ்ச்சியாகும். வேளாண்மை, காட்டுத் தொழில், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் என்பனவற்றின் பங்கானது 1959 - 1970 ஆண்டுகளில் சராசரி 39 சத வீதத்திலிருந்து 33.7 சத வீதமாக 1971 முதல் 1974 வரையான ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்தது, இதற்கு, முழுமையான முறைகளில் வேளாண்மைத் துறையின் வெளியீடு உயர்வடைகின்ற காரணத்தால் வேளாண்மைத் துறையின் மொத்த அளவு வளர்ச்சியின் வெளியீட்டத்தை பெருந்தோட்டத்துறையின் உற்பத்தி வீழ்ச்சி தடைப்படுத்தியமை காரணமாகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியில் வேளாண்மையினது பங்கின் வீழ்ச்சிக்கு மற்றத் துறைகளது வளர்ச்சி வீதத்தின் உயர்வீத உயர்ச்சியும் ஏதுவாகின்றது என்பது தெளிவாகின்றது.

**அட்டவணை II (அ) 1**

**நிலையான (1959) காரணிச் செலவு விலைகளின்படி**

**மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான அமைப்பு**

| துறைகள் | 1959 | | 1973 | | 1974 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், வேட்டையாடுதல், கடற்றொழில் ... | 2,302 | 39.1 | 3,388 | 32.6 | 3,558 | 33.1 |
| 2. சுரங்கத் தொழிலும, பார்க் குழித்தொழிலும் ... | 31 | 0.5 | 266 | 2.6 | 191 | 1.8 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 682 | 11.6 | 1,417 | 13.6 | 1,359 | 12.6 |
| 4. கட்டடவாக்கம் ... | 283 | 4.8 | 516 | 4.9 | 553 | 5.1 |
| 5. மின்சாரம், வாயு, நீர், சுகாதாரப் பணிகள் ... | 10 | 0.2 | 31 | 0.3 | 32 | 0.3 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், செய்தித்தொடர்பு ... | 541 | 9.2 | 1,019 | 9.8 | 1,054 | 9.8 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 801 | 13.6 | 1,383 | 13.3 | 1,450 | 13.5 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, மெய் ஆதனங்கள் .. | 51 | 0.9 | 142 | 1.4 | 165 | 1.5 |
| 9. குடியிருப்புகளின் உடைமை ... | 201 | 3.4 | 318 | 3.1 | 344 | 3.2 |
| 10. பொது நிருவாகமும், பாதுகாப்பும் | 301 | 5.1 | 567 | 5.5 | 609 | 5.7 |
| 11. பணிகள் .. | 728 | 12.3 | 1,379 | 13.3 | 1,441 | 13.4 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி... | 5,930 | — | 10,426 | — | 10,755 | — |
| 13. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் ... | — 37 | — 0.6 | — 44 | — 0.4 | — 24.9 | — 0.2 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 5,893 | 100.00 | 10,383 | 100.0 | 10,731 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியினை ஆய்கையில் வர்த்தக மாற்று வீதத்தினையும் எடுத்துக்கொள்ளல் வேண்டும். ஏனெனில், அது ஏற்றுமதிகளின் இறக்குமதிக் கொள் அளவை மாற்றியமைப்பதால் மூல வளங்களின் தேறிய வெளிப்பாய்தலிற்கு வழி வகுக்கிறது. 1974 இல் இறக்கு மதிக் குறிகாட்டி 17.7 சத வீதத்தால் உயர்வடைய ஏற்றுமதிக் குறிகாட்டி 15.5 சத வீதத்தால் உயர்வடைந்தது, இதன் விளைவால் வர்த்தக மாற்று வீதம் 1974 இல் 10.7 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஒப்புநோக்குகையில் 1973 இன் பங்கு 13.8 சத வீதமாகும். வர்த்தக மாற்று வீதத்தின் மாற்றங் களுக்கேற்ப உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியை சீராக்கப்பட்டதின் விளைவால் (உண்மைத் தேசிய வருவாய்) 4.1 சத வீதத்தால் உயர்வடைந்தது. ஒப்பு நோக்குகையில் உண்மை வெளியீட்டத்தின் உயர்ச்சி 1.7 சத வீதமாகும். 1973 இன் 20 சத வீதமான உயர்ச்சியுடன் ஒப்புநோக்குகையில், நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி 30 சத வீதத்தால் உயர்ந்ததென மதிப்பிடப்படுகிறது.

1974 இல் இலங்கையின் குடித்தொகை 134 இலட்சமென மதிப்பிடப் பட்டுள்ளது. இது 1973 ஆம் ஆண்டைவிட 1.6 சத வீத உயர்வைக்கொண்ட தாகும். ஆளுக்கான உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியானது, 1973 இல் ரூ. 784 இலிருந்து 1974 இல் ரூ. 801 ஆக உயர்ந்தது. நடைமுறை விலை களில் ஆளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 1973 இல் ரூ. 1,144 இலி ருந்து 1974 இல் ரூ. 1,470 ஆக உயர்ந்ததென மதிப்பிடப்படுகிறது.

### மூலவளங்களும் பயன்களும்

1974 இல் பொருளாதாரத்திற்கு கிடைக்கக்கூடிய மொத்த மூலவளங்களை யும் அவற்றின் பயன்பாட்டினையும் அட்டவணை II (அ) 2 காட்டுகிறது. பொருளாதாரத்திற்கு கிடைக்கக்கூடிய உள்நாட்டு உற்பத்தியையும் சந்தை விலைகளிற்கான இறக்குமதிகளையும் கொண்ட மூலவளங்களின் தொகை ரூ. 2,63940 இலட்சமாகும். ஒப்புநோக்குகையில் 1973 இன் தொகை ரூ. 1,95920 இலட்சமாகும். மொத்த மூலவளங்களின் உயர்ச்சியானது மொத்தத் தேசிய உற்பத்தியின் ரூ. 48,400/- இலட்ச உயர்ச்சியையும் இறக்குமதிகளின் ரூ. 19620 இலட்ச உயர்ச்சியையும் கொண்டாக்கப்பட்டது. மூலவளங்களில் இறக்குமதிகளின் பளுவானது, 1973 இல் 14.6 சத வீதத்தி லிருந்து 1974 இல் 18 சதமாக உயர்ந்து, 1973 ஆம் 1974 ஆம் ஆண்டுகளுக் கிடையிலான இறக்குமதி விலைகளின் உயர்ச்சியினைத் தெளிவாக்குகின்றது. 1974 இல் மூலவளங்களின் உண்மை உயர்ச்சியானது உள்நாட்டு உற்பத்தி யின் உயர்ச்சியிலிருந்தே எழுந்தது. உண்மை இறக்குமதிகள் மத்திய வங்கியால் கணிக்கப்பட்டவாறு, 1974 இல் இறக்குமதி அளவுகளின் குறிகாட்டி 29.1 சத வீதத்தால் கீழிறங்கியது.

1974 இல் கிடைக்கக்கூடிய மூலவளங்களின் ஒதுக்கீட்டினை ஆய்கையில், மொத்த மூலவளத்தில் நுகர்வின் பங்கு 1973 இல் 72.7 சத வீதத்திலிருந்து 1974 இல் 74 சத வீதமாக உயர்ந்தவேளை மூலதன அமைப்பினது பங்கு 13 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாக குறைய ஏற்றுமதிகளின் பங்கு 14 சத வீதத்தில் நிலையாக அமைந்திருந்தது.

## அட்டவணை II (அ) 2

### மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயங்கள் | தொகை (ப. இ. ரூ.) | | | முன்னைய ஆண்டுக்கு மேலான சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1974 | 1973 | 1974 |
| அ. மூல வளங்கள் | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 13,634 | 16,741 | 21,581 | + 22.8 | + 28.9 |
| பொருட்களினதும், காரணிகள் அல்லாத பணிகளினதும் இறக்குமதிகள் ... | 2,480 | 2,851 | 4,813 | + 15.0 | + 68.8 |
| மொத்தம் ... ... .. | 16,114 | 19,592 | 26,394 | + 21.6 | + 34.7 |
| ஆ. பயன்பாடு | | | | | |
| நுகர்வு ... ... ... | 11,697 | 14,246 | 19,470 | + 21.8 | + 37.0 |
| மொத்த உள்நாட்டு மூலதன அமைப்பு ... | 2,118 | 2,630 | 3,140 | + 24.2 | + 19.4 |
| பொருட்களினதும் காரணிகளல்லாத பணிகளினதும் ஏற்றுமதிகள் .. | 2,300 | 2,716 | 3,784 | + 18.1 | + 39.3 |
| மொத்தம் ... ... ... | 16,114 | 19,592 | 26,394 | + 21.6 | + 35.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1974 இல் நுகர்வு மீது செலவிடப்பட்ட மொத்த மூலதனத்தின் தொகை ரூ. 194,700 இலட்சமாக அமைய ஒப்புநோக்குகையில், 1973இன் தொகை ரூ. 142,460 இலட்சமாக அமைவதுடன் 37 சதவீத உயர்ச்சியினையும் காட்டுகிறது. மூலதன அமைப்பிற்குப் பயன்படுத்த மூலவளங்களின் தொகையானது 1973 இல் ரூ 26300 இலட்சத்திலிருந்து 1974 இல் 31400 இலட்சமாக உயர்ந்தது. இறக்குமதியின் விலைகள் உயர்ச்சியானது நுகர்வுமட்டத்தின் மீதும் மூலதன அமைப்பின் மீதும் ஒரு பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. மத்திய வங்கியின் குறிகாட்டியின்படி (1967 = 100) 1973 க்கும் 1974 க்கும் இடையில் இறக்குமதி விலைகள் 77 சத வீதத்தால் உயர்ந்தன. அதன் விளைவால் இறக்குமதிகளின் அளவில் 29.1 சத வீழ்ச்சி ஏற்பட்டது. இறக்குமதி விலைகளினது உயர்ச்சியின் தாக்கமானது, பெரும்பாலும் மூலதனப் பொருள் இறக்குமதியில் காணப்பட்டது. அது 40.5 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. மூலதனப் பொருட்களை இறக்குமதிகளின் வீழ்ச்சித் தாக்கமானது, வேளாண்மை கட்டடவாக்கம் போன்ற குறைந்தளவு இறக்குமதியாலான அரசினது துறைகளின் மூலதன அமைப்பின் உயர்ச்சியால் எதிரீடு செய்யப்பட்டது. இதன் விளைவால் 1974இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த நிலையான மூலதன அமைப்பு 19.2 சத வீதத்தால் உயர்ந்ததெனமதிப்பிடப்படுகிறது. ஒப்பிடுகையில் 1973இன் உயர்ச்சி 13.0 சதவீதமாகும்.

1973 இன் பெறுமதியான ரூ. 27,160 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், 1974இல் ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 37,840 இலட்சமாக அமைந்து 39.3

சத வீத ஒரு உயர்ச்சியைக் காட்டுகிறது. ஏற்றுமதிகளின் பெறுமதியானது, பெரும்பாலும், கூடிய ஏற்றுமதி விலைகளால் தெளிவாக்கப்படுகிறது. மத்திய வங்கியின் குறிகாட்டியினது கணிப்பின்படி 1974 இல் ஏற்றுமதிகளின் அளவானது 13.4 சத வீதத்தால் வீழ்ச்சியுற, ஒப்புநோக்குகையில் 1973 இன் வீழ்ச்சி 1 சத வீதமாகும்.

2. உற்பத்திப் போக்குகள்

வேளாண்மை – தேயிலை

1974 இல் தேயிலை உற்பத்தியானது, 4498 இலட்ச இருத்தல்களாகும். 1973 ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் 6 சத வீத வீழ்ச்சியினைக் காட்டுகிறது. நிலவமைப்பு பிரிவினது பகுப்பு தாழ்நிலத் தேயிலைகளின் உற்பத்தியில் வீழ்ச்சியே முதன்மைக் காரணமாக விளங்குவதோடு மத்திய உயர் நிலத் தேயிலைகளின் உற்பத்தியில் எல்லையளவான உயர்ச்சியும் பதிவுசெய்யப்பட்டது

உற்பத்தியின் வீழ்ச்சிக்கு வளமாக்கி குறைந்தளவு பயன்படுத்தப்பட்டமையும், தோட்டங்களின் துண்டாடலும் காணிச் சீர்திருத்தம்பற்றிய நிலையற்ற தன்மையும், ஆண்டிறுதியில் நிலவிய சாதகமற்ற கால நிலைகளும் முதன்மையாக அமைகின்றன். 1973 இன் 598740 ஏக்கர்களுடன் ஒப்பிடுகையில், 1974 இல் 598,466 ஏக்கர்கள் தேயிலை பயிராக்கத்திற்குட்பட்டிருந்தது. 1973 இன் ரூ. 222 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1974 இல் தேயிலை மீள நடுகைக்கான உதவுதொகைக் கொடுப்பனவுகள் ரூ. 225 இலட்சமாகும் 1974 இல் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 4284 ஏக்கர்களாகும். இது 1973 இன் மீதான 167 ஏக்கர் குறைவினைக் காட்டுகிறது. 1974 இல் தேயிலைத் தொழிற்கூட புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் 47 இலட்சம் கடன்களாக ஒப்புதலளிக்கப்பட்டது.

றப்பர்

1974 இல் றப்பர் உற்பத்தி 3010 இலட்ச இருத்தல்களாக மதிப்பிடப்பட்டது. ஒப்புநோக்குகையில், 1973இன் உற்பத்தி 3400 இலட்ச இருந்தல்களையும், 11.5 சத வீத வீழ்ச்சியையும் காட்டுகிறது.

ஒவ்வாக் காலநிலையில் பால் பெறுகை நாட்களைக் குறைக்க குறைந்தளவு வளமாக்கிப் பயன்பாடு எல்லையளவு இலாப பயிராக்கத்திற்குட்பட்ட நிலப்பரப்பின் குறைப்பும் கைவிடலும் என்பன உற்பத்தி வீழ்ச்சிக்கு ஏதுவாயின.

1974இல் 563474 ஏக்கர்கள் பயிராக்கத்திற்குட்பட்டிருந்தது. ஒப்புநோக்குகையில் 1973 இன் பரப்பு 565000 ஏக்கர்களாகும். 1974இல் மொத்தம் 7076 ஏக்கர்கள் மீள பயிரிடப்பட்டது. இது 315578 ஏக்கர்களை மீளப் பயிரிடப்பட்ட பரப்பிற்குள் கொணர்கிறது. அல்லது இறப்பரிற்குக் கீழான ஏக்கர் பரப்பில் 56 சத வீதமாகும். அண்மை ஆண்டுகளில் மீளப்பயிரிடலிற்குரிய செலவு மிகவும் உயர்ந்தமையால், 1974 இல் றப்பர் பயிர் உதவுதொகை திட்டத்திற்குக்கீழ் இரு ஏக்கருக்கான உதவு தொகைக் கொடுப்பனவுகள், ரூ. 2,000/- க்கு உயர்த்தப்பட்டது. 1973ன் 158 இலட்சத்துடன் ஒப்புநோக்குகையில் 1974 இல் இறப்பர் மீள நடுகை உதவு தொகைத் திட்டத்தின்கீழ், உதவு தொகை கொடுப்பனவுகள் ரூ. 128 இலட்சமாகும்.

தெங்கு

1973 இன் 19350 இலட்சத் தேங்காய்களுடன் ஒப்புநோக்க, 1974இன் தெங்கு உற்பத்தி 20310 இலட்ச தேங்காய்களையும், ஒரு 5 சத வீத உயர்ச்சியையும் காட்டுகிறது. உற்பத்தியினது மந்தமான வளர்ச்சிக்கு வரட்சித் தன்மைகள், தெங்குப் பூச்சிகள் சில பகுதிகளைப் பாதித்தமை குறைந்தளவாக வளமாக்கியைப் பயன்படுத்தியமை என்பன காரணங்களாக அமைந்ததுடன், உற்பத்தியின் சீர்குலைவிற்கு காணிச் சீர்திருத்தமும் காரணமாயிற்று.

உதவு தொகை திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வளமாக்கி 66 சத வீதத்தாலும், 1973 இன் 49350 தொன்களிலிருந்து 1974 இல் 16745 தொன்களாலும் குறைவடைந்தது.

நெல்

1973 / 74 பெரும் போகத்தினதும் 1974ன் சிறுபோகத்தினதும் மொத்த நெல் உற்பத்தி 768 இலட்சம் புசல்கள் என குடித்தொகை புள்ளி விவரத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டது. இது முன்னைய ஆண்டு உற்பத்தியில் ஒரு 22 சத வீத உயர்ச்சியைக் காட்டுகிறது. உற்பத்தியின் இவ்வுயர்ச்சி 1973/74 இன் பெரும்போகத்தின் உயர்ச்சியான 156 இலட்சப் புசல்களையும் 1974 இன் சிறுபோகத்தின் உயர்ச்சியான 33 இலட்சம் புசல்களையும் கொண்டாக்கப்பட்டது. நெல் உற்பத்தியின் உயர்ச்சிக்கு பயிராக்கலிற்குட்பட்ட நிலப்பரப்பு குறிப்பாக 1974 இன் சிறுபோகத்தில் உயர்வடைந்தமை முதன்மையாக அமைகிறது. முன்னைய ஆண்டின் தொடர்பான காலங்களின் 18 இலட்ச ஏக்கர்களுடன் ஒப்புநோக்குகையில் 1973/74 பெரும்போகம், 1974 இன் சிறு போகம் என்பவற்றில் பயிராக்கலிற்குட்பட்ட மொத்தப் பரப்பு 20 இலட்சம் ஏக்கர்களாகும். முன்னைய ஆண்டின் ஏக்கருக்கான 44.6 புசல்களுடன் ஒப்புநோக்குகையில், 1974 இல் சிறு அறுவடைக்காலங்களில் ஏக்கருக்கான விளைச்சல் 45.7 புசல்களாகும்.

நெல்லிற்கான வளமாக்கிகள் வழங்கல் 1973இல் 96,816 தொன்களிலிருந்து 1974 இல் 115702 தொன்களாக உயர்வடைந்தது. 1973 இன் ரூ. 283 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1974 இல் நெல் பயிர்ச் செய்கைக்கான புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட கடன்களின் தொகை ரூ. 1090 இலட்சமாகும். 1973 இன் 2288 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகையில் 1974 இல் உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல் 208 இலட்சம் புசல்களாகும். நெல் உற்பத்தியிலிருந்து விரிவான பகுப்பினை, உள்நாட்டு வேளாண்மைதுறை II (ஆ) தருகிறது.

(1) துணை உணவுப் பயிர்களும் சிறு ஏற்றுமதிப் பயிர்களும்

1973 இன் 34.9 சத வீத உயர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 1974 இல் துணை உணவுப் பொருட்களின் வெளியீட்டம் 14.4 சத வீதத்தால் உயர்வடைந்ததென மதிப்பிடப்படுகிறது. பயிர்கள் குரக்கன், சோளம், மரவள்ளி, இறுங்கு, தட்டைப்பயறு, சின்ன வெங்காயம் என்பன பெருமளவு உயர்ச்சியினைப் பதிவு செய்தன.

வெளியீட்டத்தின் உயர்ச்சிக்கு பண்டங்களுக்கு உற்பத்தியாளர் உயர்விலைகள் கொடுத்த ஊக்கமும் அரசாங்கத்தின் உணவுத் திட்டம் உற்பத்திக்குக் கொடுத்த தூண்டுகோலும் காரணமாக அமைகின்றன.

1973 இன் 73 சத வீத உயர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து, சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான க. ஏ. பெ. இன் பெறுமதி 50 சத வீதத்தால் உயர்வடைந்தது. வெற்றிலை, கொக்கோ, கறுவா, பப்பயின் என்பனவற்றின் வெளியீட்டத்தின் குறிப்பிடத்தக்களவு உயர்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன.

**சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும்**

1973 இன் வெளியீட்டத்துடன் ஒப்பிடுமிடத்து, இத்துறையின் வெளியீட்டம் 1974 இல் 34 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், இத்துறையின் வெளியீட்டம் 1972 இன் வெளியீட்டத்திற்கு மேல் 294 சத வீத உயர்ச்சியைப் பதிவு செய்ததுடன் 1973 இல் இத்துறையின் வெளியீட்டம் சிறப்பாக உயர்வடைந்திருந்ததென்பதை குறிப்பிடல் வேண்டும். 1974 இல் இத்துறையில் உயர்மட்டமான தொழிற்பாடுகள் பேணப்பட்டது. 1974இல் ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக் கற்களின் க. ஏ. பெ. இன் பெறுமதி 1326 இலட்சமாகவும், 1973 க்கு மேலான ஒரு 13 சத வீத குறைவையும் கொண்டுள்ளது 1974 இல் அரசு இரத்தினக் கல் கூட்டுத்தாபனம் வைத்திருந்த இருப்பின் பெறுமதி ரூ. 90 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது.

காரீயம், இல்மனைற், சுண்ணக்கல், களி என்பனவற்றின் உற்பத்தி உயர்ச்சிகள் இத்துறையின் வெளியீட்டத்திற்கு குறிப்பிடத்தக்க பங்கைச் செலுத்தின.

**கால்நடை**

1973 இன் 3.5 சத வீதமான வீழ்ச்சிக்கு ஒப்பிட 1974 இல் கால்நடை உற்பத்திகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பெறுமதி 7.5 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. பால் உற்பத்தியானது, 1973 இன் 3004 இலட்சம் போத்தல்களிலிருந்து 1974 இல் 2330 இலட்சம் போத்தல்களாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றது. 1974 இல் முட்டை உற்பத்தியானது 9.2 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது.

**மீன்**

1973 இன் உயர்ச்சியான 0.9 சத வீதத்திற்கு ஒப்பிட, 1974 இல் மீன் உற்பத்தியானது, 2.5 சத வீதத்தால் உயர்ந்திருந்தது. இவ்வுயர்ச்சிக்கு தனியார் துறையிடமிருந்து பெற்ற உயர்மட்ட உற்பத்தி முதன்மையாக அமைகிறது. 1974 இல் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் கொணரப்பட்ட மீன் 6.4 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது.

**தயாரிப்புத் தொழில்**

1974 இல் தயாரிப்புத் துறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெறுமதி ரூ. 1,359 இலட்சமாகும். 1973 இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெறுமதியின் மீதான 4.1 சத வீத வீழ்ச்சியை இது காட்டுகிறது. இது தொழிற்கூடக் கைத்தொழிலினதும் பெருந்தோட்டத் துறையின் தயாரிப்பு உறுப்புகளினதும் வெளியீட்டத்தின் வீழ்ச்சியைக் காட்டுவதாக அமைகிறது.

1973 இன் 0.2 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1974 இன் தொழிற் கூடக் கைத்தொழில் வெளியீட்டத்தின் பெறுமதி 1.1 சத வீதமாகும். இதற்கு மூலப்பொருட்கள் ஏறக்குறைய 1973 இன் மட்டத்தின் அளவில் கிடைத்த மையே காரணமாயிற்று. மத்திய வங்கியின் இறக்குமதி அளவு (1967 = 100) குறிகாட்டியின்படி மூலப் பொருள் இறக்குமதிகள் 1973 இன் 47 சத வீதத் திலிருந்து 1974 இல் 4.5 சத வீதமாக வீழ்ச்சியுற்றது. தேயிலை றப்பர் உற் பத்திகளின் வீழ்ச்சியும், தெங்கு உற்பத்தியின் எல்லையளவான உயர்ச்சியும் தேயிலை றப்பர் தெங்கு பதனிடலில் சேர்க்கப்பட்ட உண்மையடிப்படையி லான பெறுமதியின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

குடிசைக் கைத்தொழில் வெளியீட்டப் பெறுமதியின் உயர்ச்சி பெரும்பா லும் மின்தறி, கைத்தறிப் புடவைகள் என்பனவற்றின் உற்பத்தி உயர்ச்சியால் எழுந்தது. 1973 இன் 29.5 சத வீத உயர்ச்சியுடன் ஒப்பிட 1974 இல் இறுதி யாகக் கூறப்பட்டதன் வெளியீட்டப் பெறுமதி 56.4 சத வீதத்தால் உயர்ந் திருந்தது. வெளியீட்டத்தின் இவ்வுயர்ச்சிக்கு கிராமக் கைப்பணிகட்கு அர சின் உந்தல்கள் முதன்மையாகவும், வேறு மூலப் பொருட்களும் பெருமளவில் கிடைத்தமை கிராம வருவாய்களினது உயர்ச்சியும் காரணமாக அமைகின்றன.

**கட்டடவாக்கம்**

1973 இன் 2.2 சதவீத உயர்ச்சிக்கு ஒப்பிட 1974 இன் கட்டடவாக்கத் துறையின் வெளியீட்டப் பெறுமதி 7.1 சத வீதத்தால் உயர்ந்திருந்தது. கட் டடவாக்க தொழிற்பாட்டின் உயர்ச்சிக்கு மிகுந்தளவில் சீமெந்தும், இரும் பும், எஃகும் இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப் பொருட்கள் கிடைத்தமை என்பன முதன்மையாக அமைகின்றன. கட்டடவாக்கத் துறையின் உயர்ச் சிக்கு முதன்மைப்பங்கு தனியார் கட்டடவாக்க தொழிற்பாட்டின் உயர்ச்சி யால் கிடைக்கப்பெற்றது.

**பணிகள்**

1973 இன் 4.1 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1974 இல் பணிகள் துறையின் உண்மை நியதிகள் 5.3 சத வீதத்தால் உயர்ந்திருந்தது. இவ் வுயர்ச்சிக்கு பொது நிருவாகமும் பாதுகாப்பும் வர்த்தகமும் போக்குவரத்தும் வங்கித்தொழிலும் காப்புறுதியும் பணிகளும் என்பனவற்றின் வெளியீட்டத் தின் பெறுமதி உயர்ச்சிகள், ஏதுவாயின. 1974இல் வர்த்தகம், போக்குவரத் தின் வெளியீட்டப் பெறுமதி, 4.2 சத வீதத்தால் உயர்வடைந்தது. இதற்கு உள்நாட்டு வேளாண்மையினது வெளியீட்ட உயர்ச்சியே முதன்மையாகின்றது

**3. நடைமுறைக் காரணிச் செலவுகளில் மொத்தத் தேசிய உற்பத்தி**

1972, 1973, 1974 ஆம் ஆண்டுகட்கான மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகள் அட்டவணை II (அ) 3 இல் சுருக்கிக் கீழ் தரப்பட்டுள்ளன.

1973 இன் 19.6 சத வீத உயர்ச்சியுடன் ஒப்பிட, 1974 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 30.0 சத வீதத்தால் உயர்வடைந்ததென மதிப்பிடப்படுகிறது.

## அட்டவணை II (அ) 3

## நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில், மொத்தத் தேசிய உற்பத்தி

| துறைகள் | மொத்தம் (ப. இ. ரூ.) | | | சென்ற ஆண்டுக்கு மேலான சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1974 | 1973 | 1974 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடுதலும், மீன் பிடித்தலும் ... | 4,119 | 5,026 | 8,356 | +22.0 | + 66.3 |
| 2. தயாரிப்புத்தொழில், சுரங்கத்தொழிலும், பார்க்குழித் தொழிலும், மின்வலுவும், வாயுவும் ... ... | 1,859 | 2,380 | 2,756 | +28.0 | + 15.8 |
| 3. கட்டடவாக்கம் ... ... | 711 | 802 | 1,011 | +12.8 | + 26.1 |
| 4, வர்த்தகம், போக்குவரத்தும் ஏனைய பணிகளும் | 6,118 | 7,057 | 7,682 | +15.3 | + 8.9 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 12,807 | 15,265 | 19,805 | +19.2 | + 29.7 |
| 6. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருவாய் .. | —137 | —111 | —111 | — | — |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி ... .. | 12,671 | 15,154 | 19,694 | +19.6 | + 30.0 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி

1973 இன் 22.0 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிட, வேளாண்மை, காட்டுத் தொழில், மீன்பிடி என்பனவற்றில் சேர்க்கப்பட்ட பெறுமதி 66.3 சத வீதத் தால் உயர்வடைந்திருந்தது, இத்துறையில் சேர்க்கப்பட்ட பெறுமதியின் உயர்ச்சியானது பெரும்பாலும் உள்நாட்டு வேளாண்மையிலிருந்து எழுந்ததா கும். நெல் உற்பத்திக்குச் சேர்க்கப்பட்ட பெறுமதி 1973 இன் மேல் 130.7 சத வீதத்தால் உயர்வடைந்திருக்க, அதே காலப்பகுதியில் துணை உணவுப் பொருள்களுக்கு சேர்க்கப்பட்ட பெறுமதி 85.0 சத வீதத்தால் உயர்வடைந் திருந்தது. 1974 இன் 7.8 சத வீத உயர்ச்சியுடன் ஒப்பிட 1974 இல் பெருந் தோட்டத் துறைக்கு (தேயிலை, றப்பர், தெங்கு) சேர்க்கப்பட்ட பெறுமதி 58.8 சத வீதத்தால் உயர்வடைந்திருந்தது. உள்நாட்டு வேளாண்மையினதும் பெருந்தோட்ட வேளாண்மையினதும் சேர்க்கப்பட்ட பெறுமதியின் உயர்ச்சி யானது இத்துறைகளில் பெருமளவில் உயர்ந்திருந்த விலைகளில் தெளிவாக்கப் படுகிறது.

1973 இன் 240.3 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிட சுரங்கத் தொழில், பார்க்குழித் தொழில் என்பனவற்றிற் சேர்க்கப்பட்ட பெறுமதி 23.7 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்தது.

1974 இல் தயாரிப்புத் தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி 1973 ஐ விட 22.7 சதவீதத்தால் உயர்வாகக் காணப்பட்டது. 1973 இன் 4.1 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிட, 1974 இல் தொழிற்சாலைக் கைத்தொழிலில் சேர்க்கப் பட்ட பெறுமதி 5.4 சதவீதத்தால் உயர்வடைந்திருந்ததென மதிப்பிடப்படு கிறது. தயாரிப்புத் தொழில் துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஒரு குறிப்பிடற்குரிய பங்கு கைத்தறி, மின்தறி துறைகளில் ஏற்பட்ட 55.5 சதவீத அதிகரிப்பால் ஏற்பட்டது. 1973 உடன் ஒப்பிட, தேயிலை றப்பர் பதனிட லிற்குக் கூட்டப்பட்ட பெறுமதி 57 சதவீதத்தால் உயர்வடைய 1974 இல் நிலவிய உயர்ந்த ஏற்றுமதி விலைகளே காரணமாகும்.

கட்டடவாக்கத்திற்கு கூட்டிய பெறுமதி ரூ. 10,110 இலட்சமாகும். இது 1973 ஐ விட 26.1 சதவீத உயர்ச்சியாகும். கட்டுமான செயற்பாடு உயர்ந்து காணப்பட்டு வதியும், வதியாகா துறைகளில் அமைந்திருந்தது.

1973 இன் 15.3 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 1974 இல், பணித் துறையின் கூட்டிய பெறுமானம் 8.9 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. பணித் துறையின் உயர்வு பெரும்பாலும் பொது நிருவாக பாதுகாப்புத் துறையிலும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத வர்த்தகம், போக்குவரத்து ஆகிய துறைகளிலும் அமைந்திருந்தது. பணிகளின் அதிகரிப்பிற்கு சுற்றுலாவில் உயர்ந்திருந்த வே. கு. ப. நடவடிக்கையும் பொறுப்பாய் இருந்தது.

**4. நிலையான (1959) காரணிச் செலவு விலைகளின் அடிப்படையில் மொத்தத் தேசிய உற்பத்தி**

அட்டவணை II (அ) 4, 1972 முதல் 1974 வரையிலான ஆண்டுகட்குரிய மொத்தத் தேசிய உற்பத்தியினை நிலையான (1959) காரணிச் செலவு விலைகளின் அடிப்படையில் 3.4 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. இது 1973 இன் 3.5 சதவீத எல்லையளவால் மட்டும் குறைந்திருந்தது.

**அட்டவணை II (அ) 4**

**காரணிச் செலவு விலைகளில் (1959) மொத்தத் தேசிய உற்பத்தி**

| | துறைகள் | 1972 | 1973 | 1974 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் 1973 | 1974 |
|---|---|---|---|---|---|---|
| | | தொகை (ப. இ. ரூ.) | | | | |
| 1. | வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் ... | 3,478 | 3,388 | 3,558 | — 2.6 | + 5.0 |
| 2. | தயாரிப்புத் தொழில், சுரங்கத்தொழில், பார்க் குழித்தொழில், மின்சாரம், வாயு என்பன .. | 1,499 | 1,715 | 1,582 | + 14.4 | — 7.8 |
| 3. | கட்டடவாக்கம் .. | 505 | 516 | 553 | + 2.2 | + 7.1 |
| 4. | வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் ... | 4,619 | 4,808 | 5,062 | + 4.1 | + 5.3 |
| 5. | மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 10,102 | 10,426 | 10,755 | + 3.2 | + 3.2 |
| 6. | வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் ... | −72 | −44 | − 24 | — | — |
| 7. | மொத்தத் தேசிய உற்பத்தி ... | 10,030 | 10,383 | 10,731 | + 3.5 | + 3.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1973 இன் 2.2 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1974 இல் வேளாண்மை, காட்டுத் தொழில், மீன்பிடி என்பனவற்றின் வெளியீடு 5 சதவீதத்தால் உயர்வடைந்தது. இத்துறையின் உயர்வின் வீதத்திற்கு பெரும்பாலும் உள்நாட்டு வேளாண்மை வெளியீட்டின் உயர்வே காரணமாயிற்று. 1974 இல் தேயிலை, றப்பர் இரண்டும் வீழ்ச்சிகளைப் பதிவு செய்ய, தெங்கு உற்பத்தியானது, 1973 இன் மட்டத்தினின்று எல்லையளவிலேயே உயர்ந்திருந்தது. மாறாக நெல் உற்பத்தியானது, 22 சதவீதத்தால் உயர்வடைய, துணை உணவுப் பயிர்களின் உற்பத்தி, 14.4 சதவீதத்தால் உயர்வடைந்தது.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மீன்பிடி, என்பனவற்றின் வெளியீட்டத்திலும் உயர்ச்சிகள் பதிவு செய்யப்பட, கால்நடை வெளியீட்டகத்தில் குறிப்பிடத் தக்களவு வீழ்ச்சி காணப்பட்டது.

1974 இல் சுரங்கத் தொழில், பார்க்குழித் தொழில் என்பவற்றின் வெளியீட்டம் 28.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இதற்குப் பெரும்பாலும் இரத்தினக்கல் உற்பத்திப் பெறுமதி 1973 ஐ விட குறைவாக இருந்தமையே காரணமாகும். 1974 இல் இத்துறையின் வேறு உற்பத்திகளின் வெளியீட்டம் குறிப்பாக, காரீயம், இல்மனேற்று என்பன உயர்ச்சிகளைப் பதிவுசெய்தன.

1973 இன் எல்லையளவு உயர்ச்சியான 1.2 சதவீதத்துடன் ஒப்பிட 1974 இல் தயாரிப்புத் தொழில் துறையின் வெளியீட்டம் 4.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. தயாரிப்புத் தொழிலினது, வெளியீட்டின் வீழ்ச்சி தொழிற்கூடக் கைத்தொழிலிலும், தேயிலை றப்பர், பதனிடலும் காணப்பட்டது. 1974 இல் குடிசைக் கைத்தொழிலின் வெளியீடு 56.4 சதவீத பெருமளவு உயர்ச்சியினைப் பதிவு செய்தது. தொழிற்கூடக் கைத்தொழிலின் உண்மை உற்பத்தி வீழ்ச்சிக்கு குறைப்பு நிலையில் கிடைக்கப்பெற்ற மூலப் பொருட்களே காரணமாகும். பெருந்தோட்ட வேளாண்மையினது தயாரிப்புக் கூறுகளின் வீழ்ச்சியானது, 1974 இல் இப்பொருட்களின் குறைவான மட்ட அளவு உற்பத்தியிலும், ஏற்றுமதிகளிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

1974 இல் பணிகளின் துறையின் வெளியீட்ட உயர்ச்சியானது, 5.3 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. பணித் துறையிடையில் நலத்துறை கல்வி என்பனவற்றின் பெருமளவு உயர்ச்சிக்கு 1974 இல் இப்பணிகளில் விரிவாக்கமே காரணமாகும். வேறு அரசப் பணியின் (பொது நிருவாகம், பாதுகாப்பு) வெளியீடு 7.5 சதவீதத்தால் உயர்ந்ததுடன், இது இத்துறையினது தொழில் அமைவின் உயர்ச்சியினையும் புலப்படுத்துகிறது. வேளாண்மையின் உயர்ந்த மட்ட தொழிற்பாடுகளின் காரணமாக போக்குவரத்து, வர்த்தகம் என்பனவற்றின் வெளியீடு 1973 ன் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

வர்த்தக வங்கிக் கிளைகளின் உயர்ச்சியும் வேளாண்மைப் பணி நிலையங்களின் அமைப்பும், இவ்விரண்டும் வங்கித் தொழில் நிதியீட்டப் பணிகளினது வெளியீட்டுக்கு 16.2 சதவீதமான உயர்ச்சிக்குக் காரணமாயின. 1973 இல் இத்துறையின் வெளியீட்டம் 13.8 சதவீதத்தால் உயர்வடைந்தது.

இலங்கையின் தேசிய வருமானம் பெருமளவில் இறக்குமதிகள் ஏற்றுமதிகள் மட்டத்தின் செல்வாக்கிற்குட்படுவதால் மொத்தத் தேசிய உற்பத்தியின் உண்மை உயர்ச்சியின் பகுப்பாய்வு உண்மை வருமானத்தின் இறக்குமதிகள், ஏற்றுமதிகளது விலைகளின் மாற்றங்கள் ஏற்படுத்தும் விளைவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல்வேண்டும் 1974 இல் மத்திய வங்கியின் குறிகாட்டிகள் கணக்கிட்டவாறு ஏற்றுமதி விலைகள் 55.5 சதவீதத்தால் உயர்வடைய இறக்குமதி விலைகள் 77.0 சதவீதத்தால் உயர்ந்தன. 1973 இல் ஏற்றுமதி இறக்குமதி விலைகளின் உயர்ச்சி முறையே 16 1 சதவீதமாகவும்

32.3 சதவீதமாகவும் இருந்தன. இதன் விளைவால் இலங்கையின் வர்த்தக மாற்று வீதம் 10.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது, ஒப்புநோக்குகையில், 1973 இன் வீழ்ச்சி 13.3 சதவீதமாகும். 1973 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உண்மை மூலவளங்களின் மாற்றல் என்பனவற்றின் விளைவால் ஏற்றுமதி விலைகள் பெரும்பாலும் மேலெழுந்த 1973 இன் ரூ. 11,700 இலட்சத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் வர்த்தக மாற்று வீதம் 1974 இல் ரூ. 11,434 இலட்சமாக அமைந்தது. இதன் விளைவால் உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியை விட உண்மை தேசிய வருமானம் உயர் வீத உயர்ச்சியைப் பதிவு செய்தது. 1973 இன் ரூ. 92,124 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1974 இல் உண்மை தேசிய வருமானம் ரூ. 95,871 இலட்சமென மதிப்பிடப்படுகிறது. எனவே, ஆளுக்கான உண்மை வருமானம் 1973 இன் ரூ. 695/- இலிருந்து 1974 இல் ரூ. 716/- ஆக உயர்ந்ததுடன் 3.0 சதவீத உயர்ச்சியினையும் காட்டுகிறது.

5. மொத்தத் தேசியச் செலவு

அட்டவணை II (அ) 5, மொத்தத் தேசியச் செலவின் இன்றியமையாக் கூறுகளைச் சுருக்கித் தருகின்றது.

அட்டவணை II (அ) 5

நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசியச் செலவு

| விடயங்கள் | 1972 | 1973 | 1974 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் 1973 | 1974 |
|---|---|---|---|---|---|
| | (தொகை ப. இ. ரூ.) | | | | |
| 1. தனியார் நுகர்வு ... ... ... | 9,773 | 12,203 | 16,700 | + 24.9 | + 36.8 |
| 2. அரச நுகர்வு ... ... | 1,924 | 2,043 | 2,771 | + 6.2 | + 35.6 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 2,118 | 2,630 | 3,140 | + 24.2 | + 19.4 |
| 4. மொத்த உள்நாட்டுச் செலவு ... .. | 13,814 | 16,876 | 22,610 | + 22.2 | + 34.0 |
| 5. வெளிநாட்டில் தேறிய முதலீட்டம் ... | — 269 | — 161 | — 889 | — | — |
| 6. கழிவு: பன்னாட்டுக் கொடைகளினதும் மாற்றல்களினதும் தேறிய பெறுகைகள் ... | — 48 | — 84 | — 252 | — | — |
| 7. மொத்தத் தேசியச் செலவு ... ... | 13,497 | 16,630 | 21,469 | + 23.2 | + 29.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1974 இன் நடைமுறைச் சந்தை விலைகளின் மொத்தத் தேசியச் செலவு 29.1 சத வீதத்தால் உயர்ந்திருந்ததென மதிப்பிடப்படுகிறது. இவ்வுயர்ச்சியின் வீதம் நுகர்வுச் செலவு மூலதனச் செலவு ஆகிய இரண்டின் உயர்ச்சியில் எடுத்துக்காட்டப்படுகிறது. நுகர்வுச் செலவு 36.7 சத வீதத்தில் உயர மூலதனச் செலவு 19.4 சத வீதத்தால் உயர்ந்தது. 1973 உடன் ஒப்பிடுகையில் [1974 இன் உயர்மட்டமான செலவு] இக்காலப் பிரிவின் விலைகளில் உயர்ச்சியால் எடுத்துக்காட்டப்படுகிறது.

**நுகர்வோர் கேள்வி**

1974 இல் நுகர்வுச் செலவு ரூ. 44770 இலட்சம் அல்லது 36.8 சதவீதத்தால் உயர்வடைந்தது. நுகர்வின்மீதான செலவின் விபரம், உள்நாட்டு உற்

பத்திப் பொருட்கள் மீதான செலவு, 1973 இன் ரூ. 91560 இலட்சத்திலிருந்து 1974 இல் ரூ. 123070 இலட்சமாகவும் 34.48 சத வீதத்தாலும் இறக்குமதிப் பொருட்கள் மீதான செலவு 1973 இன் ரூ. 13000 இலட்சத்திலிருந்து ரூ. 20730 இலட்சமாகவும், 59.5 சத வீதத்தாலும் உயர்வடைந்தமையை எடுத்துக்காட்டுகிறது. இது அட்டவணை 10 இன் பிற்சேர்க்கை III இலிருந்து தெரிகிறது.

அட்டவணை II (அ) 6 நடைமுறைச் சந்தை விலைகளில் 1973, 1974 ஆண்டுகளின் தனியார் செலவின் அமைவினைக் காட்டுகிறது.

### அட்டவணை II (அ) 6

### நடைமுறைச் சந்தை விலைகளின்படி தனியார் நுகர்வுச் செலவு*

| விடயங்கள் | 1973 | | 1972 | |
|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | 16ம் வரிசையின் சதவீதம் | தொகை ப. இ. ரூ. | 16ம் வரிசையின் சதவீதம் |
| 1. உணவு ... | 7,054 | 57.8 | 10,020 | 60.3 |
| 2. குடிபானங்கள் ... | 351 | 2.9 | 466 | 2.8 |
| 3. புகையிலை ... | 638 | 5.2 | 852 | 5.1 |
| 4. ஆடைகளும் ஏனைய சொந்தப் பொருட்களும் ... | 1.032 | 8.5 | 1,453 | 8.7 |
| 5. வாடகை, வரி, நீர்க் கட்டணங்கள் .. | 420 | 3.4 | 456 | 2.7 |
| 6. எரிபொருளும் வெளிச்சமும் ... | 316 | 2.6 | 351 | 2.1 |
| 7. தளபாடம், வீட்டுப் பொருட்கள், வீட்டிற்கான கருவிகள் | 289 | 2.4 | 379 | 2.3 |
| 8. வீட்டுப் பாவனை நடவடிக்கைகள் ... | 719 | 5.9 | 885 | 5.3 |
| 9. சொந்தக் கவனிப்புகளும் நலத்துறைச் செலவுகளும் | 247 | 2.0 | 317 | 1.9 |
| 10. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும ... | 1,033 | 8.5 | 1,069 | 6.4 |
| 11. பொழுதுபோக்கும் களியாட்டமும் ... | 514 | 4.2 | 672 | 4.0 |
| 12. பல்வகைப் பணிகள் ... | 344 | 2.8 | 470 | 2.8 |
| 13. வெளிநாட்டில் வதிவோர்களின் செலவினம .. | — | — | — | — |
| 14. கழிவு: நாட்டிலுள்ள வதிவற்றோர்களின் செலவினம் | — 557 | — 4.6 | —610 | —3.6 |
| 15. கழிவு: அரசாங்க உள்ளூர்க் கொள்வனவு .. | — 197 | — 1.6 | — 79 | —0.5 |
| 16. குடும்பங்களினதும், இலாபமற்ற தனியார் நிலையங்களினதும் நுகர்வுச் செலவினம் ... | 12,203 | 100.0 | 16,700 | 100.0 |

மூலம இலங்கை மத்திய வங்கி.

* ''இப்பாகுபாடு தேசியக் கணக்குகளினதும அதற்குத் துணையான அட்டவணைகளினதும் ஒழுங்குமுறை'' ஐ. நா. நியூயோர்க்கு, 1964, என்பதனை அடிப்படையாகக் கொண்டது.

1973இன் 65.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1974இல் 67.9 சத வீதமான செலவு உணவு, குடிபானம் புகையிலை மீதான செலவாக உள்ளதைக் காணலாம். எனவே, 1973 உடன் ஒப்பிடுகையில் சிறு அளவான செலவு, உணவு நீங்கலாக ஏனைய விடயங்களின்மீது செலவிடப்பட்டது.

தனியார் நுகர்வுச் செலவில் ரூ. 44970 இலட்ச உயர்ச்சி பின்வருமாறு ஒதுக்கப்பட்டது: உணவு குடிபானங்களும் புகையிலையும் 37.4 சத வீதம், உடை 9.4 சதவீதம், போக்குவரத்தும் செய்தித்தொடர்பும் 0.8 சதவீதம் பொழுதுபோக்கும் களியாட்டமும் வேறு பணிகளும் 16.4 சத வீதமாகும்.

6. மொத்த நிலையான மூலதன அமைப்பு

மொத்த நிலையான மூலதன அமைப்பின் விரிவான விபரம் அட்டவணை 7 இல் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. 1974 இல் அரசின் மொத்த நிலையான மூலதன அமைப்பு ரூ. 4711 இலட்சம் அல்லது 19 2 சத வீதத்தால் உயர்ந்திருந்தது. அரசின் நிலையான மூலதன அமைப்பு 37.4 சத வீதத்தால் உயர்ந்திருக்க தனியார் துறையினதும் அரசக் கூட்டுத்தாபனங்களினதும், மூலதன அமைப்பு 13.6 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. இறக்குமதி செய்யப்பட்டதும், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களினதும் விலைகள்மீதான கிடைக்கும் தரவுகள் இவ்வுயர்ச்சியில் குறிப்பிடத்தக்கதொரு பகுதி விலைகளின் உயர்ச்சியால் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. எனவே மத்திய வங்கியின் இறக்குமதி விலைகளில் (1967=100) குறிகாட்டி இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் விலை 1973 இல் 140 இலிருந்து 1974 இல் 208ஆக உயர்வடைந்ததைக் காட்டுகின்றது.

அரசதுறை

1973 இன் 14.2 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1974 இல் அரசதுறையின் நிலையான மூலதன அமைப்பு 37.4 சத வீதத்தால் உயர்ந்திருந்தது. கீழுள்ள அட்டவணை அரசின் நிலையான மூலதன அமைப்பின் விபரத்தினை கைத்தொழில் வகையில் தருகின்றது.

அட்டவணை II (அ) 7

அரசாங்கத்தினது நிலையான மூலதன ஆக்கத்தின் கைத்தொழிற் பாகுபாடு

| துறைகள் | 1973 தொகை (ப.இ.ரூ.) | 1973 மொத்தத்தின் சதவீதம் | 1974 தொகை (ப. இ. ரூ.) | 1974 மொத்தத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... | 198 | 33.6 | 316 | 39.0 |
| 2. தயாரிப்புத் தொழில் ... | 9 | 1.5 | 9 | 1.1 |
| 3. மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 17 | 2.9 | 14 | 1.8 |
| 4. போக்குவரத்து களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்பு | 165 | 28.0 | 164 | 20.2 |
| 5. குடியிருப்புகளின் உடைமை ... | 11 | 1.9 | 8 | 1.0 |
| 6. பொது நிருவாகம ... | 101 | 17.1 | 139 | 17.1 |
| 7. பணிகள் ... | 89 | 15.1 | 161 | 19.8 |
| மொத்தம் | **590** | **100.0** | **811** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: இலங்கை அரசாங்க மதிப்பீடுகளில் இருந்து பெறப்பட்டவை.

1974 இல் வேளாண்மை காட்டுத்தொழில் மீன்பிடி எண்பனவற்றின் முதலீட்டின் பங்கு, அரசின் மொத்த முதலீட்டில் 39 சத வீதமாக அமைய போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்பு என்பவற்றில் அரச முதலீட்டின், முதலீட்டு 20.2 சத வீதத்திற்கு வகை கூறுகிறது. எனவே, இத்

துறைகளில் அரசின் முதலீடு, அரசின் மொத்த செலவீட்டத்தில் 59.2 சத வீதமாகும். ஒப்புநோக்குகையில் 1973 இல் 61.0 சத வீதமாகவும், 1972 இல் 61.3 சத வீதமாகவும் விளங்குகின்றது. எனவே, அரசு செலவீட்டத்தின் ஒதுக்கீடு, அண்மை ஆண்டுகளில் நிலவிய அமைப்பினையே பின்பற்றியது. 1974 இல் மற்றைய துறைகளில் அரச முதலீட்டத்தின் பங்கு பின்வருமாறு: தயாரிப்புத் தொழில் 1.1 சத வீதம், பொது நிர்வாகமும் பாதுகாப்பும் 17.1 சத வீதம் பணிகள் 19.8 சத வீதம்.

**தனியார் துறையும், அரச கூட்டுத்தாபனங்களும்**

அட்டவணை II (அ) 8 இல் தனியார் துறையினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் மொத்த நிலையான மூலதன அமைப்பின் பரம்பலினை சொத்துக்களின் வகைக்கேற்ப பாகுபடுத்திக் காட்டப்படுகின்றது.

அட்டவணை II (அ) 8

**இருப்புச் சொத்துக்களின் வகைப்படி தனியார் துறையின் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுட்பட) நிலையான மூலதனவாக்கம்**

| இருப்புச் சொத்தின் வகை | 1972 | | 1973 | | 1974 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் |
| பெருந்தோட்டச் செய்கையும் மறு நடுகையும் காணி அபிவிருத்தியும் | 112 | 6.6 | 111 | 5.8 | 98 | 4.5 |
| கட்டடமும்,ஏனைய கட்டடவாக்கமும் | 927 | 54.9 | 1,029 | 54.1 | 1,334 | 61.7 |
| பொறித் தொகுதியும் எந்திரங்களும் ... | 237 | 14.0 | 379 | 19.9 | 200 | 9.3 |
| போக்குவரத்துக் கருவிகள் ... | 278 | 16.5 | 245 | 12.9 | 279 | 12.9 |
| ஏனைய மூலதனப் பொருட்கள் ... | 135 | 8.0 | 139 | 7.3 | 250 | 11.6 |
| **மொத்தம் ...** | **1,689** | **100.0** | **1,903** | **100.0** | **2,161** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**குறிப்பு:** உரிய காலத்தில் தரவினை சில அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் தராததினால், அரசாங்கக் கூட்டுத்தாபனத் துறையில் நிலையான மூலதன அமைப்பைப்பற்றி தனித்தனியே மதிப்பிட முடியாமல் இருக்கின்றது. பொருட்கள் வெளிச்செல்லும் முறையிலிருந்து கணிக்கப்படும் மொத்தத் தனியார் துறை மூலதன அமைப்பில் இருந்து குடியிருப்போரினதும் கூட்டுத்தாபனத் துறைகளினதும் மூலதன அமைப்பின் எஞ்சிய பகுதியின் மதிப்பீட்டைப் பெறும் முறையில் கூட்டுத்தாபனங்களால் தரப்பட்ட தரவுகள் இருந்தும் மதிப்பீடு செய்கிறோம். ஆகவே, இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள தனியார் துறையின் கூட்டுத்தரவு, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் தனியார் துறையினதும் முன்னைய ஆண்டுகளின் கூட்டுமொத்தத் தொகையுடன் ஒப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

1974 இல் தனியார் துறையினதும், அரச கூட்டுத்தாபனங்களினதும், நிலையான மூலதன அமைப்பு 13.5 சத வீதத்தால் உயர்ந்திருந்ததென மதிப்பிடப்பட்டது. ஒப்பிடுகையில் 1973 இன் உயர்ச்சி 12.7 சத வீதமாகும்.

1974 இல் நிலையான மூலதன அமைப்பின் உயர்ச்சியானது, பெரும்பாலும் கட்டடம், கட்டடவாக்கம், போக்குவரத்துக் கருவி, வேறு மூலதனப் பொருட்கள் என்பனவற்றில் காணப்பட்டது.

கட்டடம், பிற கட்டடவாக்கம் என்பனவற்றில், நிலையான மூலதன அமைப்பின் பங்கு, மொத்த நிலையான மூலதன அமைப்பில் 61.7 சத வீதமாக அமைய, போக்குவரத்துக்கருவி, பிற மூலதனப் பொருட்களின் பங்கு முறையே 12.9 சத வீதமாகவும், 11.6 சத வீதமாகவும் அமைந்து விளங்கின.

1974 இல் தனியார் துறையினதும், அரச கூட்டுத்தாபனங்களினதும், மூலதன அமைப்புமீதான ஒரு குறிப்பிடத்தக்க செல்வாக்கு யாதெனின், முதலீட்ட பொருட்களின் இறக்குமதிகளின் மட்டத்தின் வீழ்ச்சியாகும். மத்திய வங்கியின் குறிகாட்டியின்படி, (1967=100) முதலீட்டப் பொருட்களினது இறக்குமதிகளின் அளவு 1973 இன் 84 இலிருந்து 1974இல் 50 ஆக வீழ்ந்து, 40.5 சத வீதமான வீழ்ச்சியைப் பதிவுசெய்கிறது. முதலீட்டப் பொருட்களின் இறக்குமதிகளின் சுருக்கத்தினை பொறித்தொகுதி இயந்திரங்களின் நிலையான மூலதன அமைப்பு வீழ்ச்சியிலும் போக்குவரத்துக் கருவிகளின் நிலையான மூலதன அமைப்பின் எல்லையளவான உயர்ச்சியிலும் எடுத்துக்காட்டப்படுகிறது. 1973 இன் 11.0 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் கட்டடமும், வேறு கட்டடவாக்கத்தினதும் நிலையான மூலதன அமைப்பு 29.6 சத வீத உயர்வீத உயர்ச்சியினைப் பதிவுசெய்தது.

1973 இன் 13.7 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1974இல் தனியார்துறையினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் இணைந்த நிலையான மூலதன அமைப்பு, நடைமுறைச் சந்தை விலைகளில் 19.2 சத வீதத்தால் உயர்ந்திருந்ததென மதிப்பிடப்படுகிறது.

**மொத்த உள்நாடடுச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்**

பின்னிணைப்பு III இன் அட்டவணை 13 மொத்த உள்நாட்டுச் செலவின் நேரடியான இறக்குமதி உள்ளடக்கத்தைக் காட்டுகிறது.

1973 இல் 7.6 சத வீதமாக இருந்த தனியார் நுகர்வினது நேரடியானது இறக்குமதி உள்ளடக்கம் 1974 இல் 10.3 சத வீதமாக உயர்வடைந்தது. மூலதன அமைப்பின் இறக்குமதி உள்ளடக்கம் 1973 இன் 20.4 சத வீதத்திலிருந்து 1974 இல் 13.3 சத வீதத்திற்கு வீழ்ந்தது.